**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**முன்னிலை : செல்வி.சு.அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**
**2026-ம் வருடம் ஜூலை மாதம் 31-ம் நாள் வெள்ளிக்கிழமை**
**அசல் வழக்கு எண்.87/2024**
**(C.N.R.No.TNDG08000109-2024)**

நடராஜ் ....வாதி

**/எதிர்/**

1.குப்புச்சாமி

2.நாகராஜன்

3.ஜெயராமன் ....பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 04.10.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 27.07.2026 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.இராஜமாணிக்கம்** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் தோன்றத் தரப்பினராக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

வழக்கு சொத்துக்கள் வாதிக்கும், லேட்.கருப்பணநாடாரின் மற்ற வாரிசுகளுக்கும் பொதுவில் பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கோரியும், அதன் தொடர் பரிகாரமாக வாதி வழக்கு சொத்தில் அமைதியான முறையில்



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.31 17:30:34 +0530

விவசாயம் செய்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களது வகையறா ஆட்களோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:–**

2.1. வாதிக்கு பழனி வட்டம், பெரியம்மாபட்டி கிராமம், புல எண்.379/3 ல் ஹெக்.1.01.0 ஏர்ஸ் (ஏக்.2.50) உள்ள நிலமும், வாதியின் தந்தை பதினெட்டாம் நாடார் மகன் திரு.கருப்பண நாடாருக்கு, புல எண்.379/2 ல் உள்ள ஹெக் 1.01.1 ஏர்ஸ் (ஏக்.2.50) நிலமும் அரசால் வழங்கப்பட்ட உபரி நிலம் என்றும், வாதியும், அவரது தகப்பனாரும் சேர்ந்து மேற்படி நிலங்களை உழுது விவசாயம் செய்து வந்தனர் என்றும், மேற்படி நிலங்களுக்கு உரிய மதிப்புத் தொகையை வாதியும், அவரது தகப்பனாரும் செலுத்தியதில் "F" படிவம் அரசு வழங்கி அதன் மூலம் 30.01.2011 ஆம் தேதியன்று சுவாதீன ஒப்படைப்பு உத்திரவு பிறப்பித்து அரசு பட்டா வழங்கி உள்ளது என்றும், வாதியின் தகப்பனார் கருப்பண நாடார் கடந்த 16.03.2005 ஆம் தேதியன்று அவரது நிலத்தைப் பொறுத்து எவர் ஒருவருக்கும் எவ்வித பாத்தியமும் செய்விக்காமல் இறந்துவிட்டார் என்றும், மேற்படியாருக்கு அவரது மனைவி ஆச்சியம்மாளும், மகள் சத்தியம்மாளும் மகன் வாதியும், மகள் கலைச்செல்வியும் சட்டப்பூர்வ வாரிசுகள் என்றும், கருப்பணநாடாரின் மேற்படி வாரிசுகளில் ஆச்சியம்மாளும், சத்தியம்மாளும் இறந்துவிட்டனர் என்றும், வாதி ஏற்கனவே கருப்பண நாடாருடன் சேர்ந்து மேற்படி நிலத்தை அனுபவித்து வந்ததால் அவரது இறப்பிற்குப் பின்னரும், அவரது மற்ற மேற்படி வாரிசுகளின் சம்மதத்தின் பேரில் தொடர்ந்து விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.31 17:30:41 +0530

2.2. வாதி தனக்காகவும், கருப்பண நாடாரின் மற்ற வாரிசுகளுக்காகவும் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்கிறார் என்றும் 1ஆம் பிரதிவாதியின் மனைவியும், 2, 3 பிரதிவாதிகளின் தாயாருமான லட்சுமி என்பவர் பெயரில் மேற்படி கிராமம், புல எண்.379/1பி–ல் உள்ள ஹெக்.0.40.50 ஏர்ஸ் (ஏக் 1.00) நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மேற்படி லட்சுமி இறந்துவிட்டார் என்றும், மேற்படி லட்சுமியின் மறைவிற்குப் பின்னர் பிரதிவாதிகள் மேற்படி நிலத்தை அனுபவித்து வருகின்றனர் என்றும், மேற்படி பிரதிவாதிகளின் நிலம் லேட்.கருப்பணநாடாரின் நிலம் அமைந்துள்ள புல எண்.379/2க்கு வடக்குப் பக்கம் அமைந்துள்ளது என்றும், இரண்டு நிலங்களுக்கு இடையே கிழமேலாக வரப்பு உள்ளது என்றும் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வாதி மற்றும் அவரது தந்தை கருப்பண நாடாரின் மூலம் கிடைக்கப்பெற்ற புல எண்கள்.379/2 மற்றும் 379/3 ஆகிய நிலங்களில் தென்னை மரம், கொய்யா மரம், மாமரம், ஆகியவற்றை வாதி பயிரிட்டார் என்றும் அப்பொழுது புல எண்.379/2க்கு உட்பட்ட அதன் வடபுறம் உள்ள தாவா நிலத்தில் பயிரிடக்கூடாது என பிரதிவாதிகள் தடுத்தனர் என்றும், மேலும் இரண்டு நிலங்களுக்கும் இடையில் கிழமேலாக உள்ள வரப்பைப் கடந்து வாதியின் தாவா நிலத்தில் ஆக்கிரமிக்கவும் முயற்சித்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.3. இந்நிலையில் கடந்த 20.12.2023 ஆம் தேதியன்று பிரதிவாதிகள் சர்வேயர் ஊன்றிய அத்துமால் கற்களை அத்துமீறி அகற்றி ஆட்சேபித்ததில் அவரை பிரதிவாதிகள் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி ரகளை செய்தனர் என்றும், வாதியின் மனைவி பழனி நகர் காவல் நிலையத்தில் 21.12.2022 ஆம் தேதியன்று மனு கொடுத்தார் என்றும், வாதியும் கடந்த 25.06.2024 ஆம் தேதியன்று ஜமாபந்தியில் சர்வே செய்ய மனுவின் (மனு எண்.2024/0123/13/003413)–ன் கீழ் பதிவு செய்த வட்டாட்சியர் அலுவலகம்



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.31 17:30:48 +0530

ஒப்புகை சீட்டு வழங்கியுள்ளது என்றும், ஆனால் இது காலம் வரை அளக்க முன்வரவில்லை என்றும், பிரதிவாதிகளுக்கும் புல எண்.379/2 ல் உள்ள தாவா நிலத்திற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றும், பிரதிவாதிகள் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னரே மேற்படியார்களுக்கு உரிய புல எண்.379/1 பி–ல் சுமார் 6 அடி ஆழத்திற்கு மண்ணை வெட்டி எடுத்து விற்றுவிட்டனர் என்றும், தாவா நிலத்தில் இருந்து பிரதிவாதிகளின் நிலம் ஆறு அடி ஆழத்தில் உள்ளது என்றும், இத்தகைய சூழ்நிலையில் கடந்த 14.08.2024 ஆம் தேதியன்று பிரதிவாதிகள் கூலியாட்களுடன் அத்துமீறி தாவா நிலத்திற்குள் நுழையவும், மண்ணை வெட்டி எடுக்கவும் முயற்சித்தனர் என்றும், எனவே வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டும் அவர் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு ஒருதலைபட்சப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

**<u>4. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

வாதி தரப்பில், வாதியான நடராஜ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10, நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.மா.சா.ஆ.2 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக கமலம் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்,</u>**

வழக்கு சொத்துக்கள் வாதிக்கும், லேட்.கருப்பணநாடாரின் மற்ற



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.31 17:30:55 +0530

வாரிசுகளுக்கும் பொதுவில் பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரமும், அதன் தொடர் பரிகாரமாக வாதி வழக்கு சொத்தில் அமைதியான முறையில் விவசாயம் செய்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களது வகையறா ஆட்களோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ? என்பதே ஆகும்.

**6. தீர்வு :–**

6.1. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்குரை, வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பிராதை தழுவி சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.1 ஆனது மாதிரி வரைபடம் ஆகும். வா.சா.ஆ.2 ஆனது கடந்த 30.01.2001–ஆம் தேதியிட்ட கருப்பண நாடார் பெயரில் வழங்கிய நில சுவாதீன ஒப்படைப்பு ஆவணம் ஆகும். வா.சா.ஆ.3 ஆனது கடந்த 23.12.2003–ஆம் தேதியிட்ட நானும், கருப்பணநாடாரும், முருகையநாடார் வகையறா மீது தாக்கல் செய்து வழக்கின் நீதிமன்ற தீர்ப்பாணை ஆகும். வா.சா.ஆ.4 ஆனது கடந்த 13.08.2024–ஆம் தேதியிட்ட லேட்.கருப்பண நாடார் பெயரில் வழங்கப்பட்ட பட்டா ஆகும். வா.சா.ஆ.5 ஆனது கடந்த 26.12.2023–ஆம் தேதியிட்ட வாதி தாவா நிலத்தை அளக்க அரசுக்கு செலுத்திய கட்டண இ–செலான் ரசீது ஆகும். வா.சா.ஆ.6 ஆனது கடந்த 25.06.2024–ஆம் தேதியிட்ட ஜமாபந்தி மூலம் தாவா சொத்தை அளக்க வாதி மனு கொடுத்ததற்கான ஒப்புகைச் சீட்டு ஆகும். வா.சா.ஆ.7 ஆனது கடந்த 18.09.2024–ஆம் தேதியிட்ட தாவா சொத்திற்குரிய அரசாங்க மதிப்பீடு ஆகும். வா.சா.ஆ.8 ஆனது கடந்த 21.12.2023–ஆம் தேதியிட்ட எனது மனைவி பிரதிவாதிகள் மீது கொடுத்த புகார் மனு ஏற்பு ரசீது ஆகும். வா.சா.ஆ.9 ஆனது கடந்த 25.03.2023–ஆம் தேதியிட்ட எனது தாயார் ஆட்சியம்மாள் இறப்பு சான்றிதழ் ஆகும். வா.சா.ஆ.10 ஆனது கடந்த



APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.31 17:31:02 +0530

05.04.2023–ஆம் தேதியிட்ட எனது தாயார் ஆட்சியம்மாள் வாரிசு சான்றிதழ் ஆகும்.

6.2. வாதி தரப்பில் வாதியின் மனைவியான கமலம் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2 தனது சாட்சியத்தில் **"தாவா சொத்தில் தென்னை, மா, கொய்யா மரங்களை பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறோம். தாவா சொத்தின் வடக்கு பக்கம் பிரதிவாதிகளின் நிலம் உள்ளது. பிரதிவாதிகள், தாவா சொத்துக்கு உட்பட்டதும், வடபுறம் உள்ளதுமான தாவா நிலத்தில் பயிரிட விடாமல் தடுத்து வருகின்றனர். பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த ஒரு பாத்தியமும் அனுபவமும் இல்லை. வயதான முதியவர்களான என் கணவரையும், என்னையும் அச்சுறுத்தி தாவா சொத்தை அபகரிக்க முயற்சித்து வருகிறார்கள்."** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.3. மேற்படி வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோரின் சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், வாதியின் தந்தையான கருப்பண நாடார் என்பவருக்கு அரசாங்கத்தால் சர்வே எண்.379–ல் 2.50 செண்ட் நிலம் வா.சா.ஆ.1–ன் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், வாதியின் தந்தையால் விவசாயம் செய்து அனுபவம் செய்யப்பட்டு, கருப்பண நாடார் அவர்கள் பெயரில் பெயர் மாறுதல் செய்யப்பட்டு வா.சா.ஆ.4–ஆன பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதையும், கருப்பண நாடார் இறந்த பின்னர் அவரது மனைவியான ஆச்சியம்மாள் அவர்கள் கடந்த 03.03.2023–ஆம் தேதி அவரது மக்களான வாதியையும், சக்தி மற்றும் கலைச்செல்வி ஆகியோரை வாரிசாக விட்டுட்டு காலமாகிவிட்டார் என்பதையும், வாதி தற்போது தனது தகப்பனருக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்பதையும் அறிய முடிகிறது.

6.4. இவ்வழக்கில் நீதிமன்றம் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அவரால் ஆணையர் அறிக்கை அறிக்கை மற்றும் வரைபடமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில், **"சர்வே எண்.379/2–ஐ அருகில் உள்ள பொழிகற்களை வைத்து அளந்து காண்பிக்கப்பட்டது. சர்வே**



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.31 17:31:07 +0530

**எண்.379/1பி உடன் 16 செண்ட் நிலம் Club ஆகி இருந்தது. மேற்படி 16 செண்ட் நிலம் சர்வே எண்.379/2–ல் உள்ளது. அந்த பகுதி சர்வேயர் வரைபடத்தில் நீல நிறமிட்டு காட்டப்பட்டுள்ளது. அதன் நீலம் கிழமேல் 124.6 மீட்டர் அகலம் கிழக்கு பகுதியில் 11 மீட்டர் என்றும் மேற்கு பகுதி கூம்பு வடிவில் முடிவடைகின்றது. மேற்படி சர்வேயர் வரைபடத்தில் நீல நிறமிட்டு காட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு பகுதியானது புல எண்.379/2–ல் உள்ளது. ஆனால் மேற்படி நீல நிற பகுதி சர்வே எண்.379/1பி–யுடன் சேர்ந்து இருந்தது. இந்த விபரம் சர்வேயர் கொடுத்த வரைபடத்தில் தெளிவாக உள்ளது."** என்று குறிப்பிட்டுள்ளார்.

6.5. மேற்படி நீ.மா.சா.ஆ.1 மற்றும் நீ.மா.சா.ஆ.2 –ஆகிய ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவா இடமான சர்வே எண்.379/2–ல் கீழமேல் 124.6 மீட்டரும், தென்வடல் கிழக்கு பகுதியில் 11 மீட்டரும் சர்வேயர் கொடுத்த வரைபடத்தில் நீல நிறமிட்ட பகுதியானது சர்வே எண்.379/1பி உடன் சேர்த்து பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதிகள் ஆஜராகி, வாதி வழக்கை மறுத்து சாட்சியம் அளிக்கவில்லை மாறாக, தோன்றாத் தரப்பினராக கருத்தப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை மூலம் வழக்கு சொத்து கருப்பண நாடார் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்து அவர் இறந்த பின்னர் வாரிசுரிமை அடிப்படையில் வாதியால் அனுபவித்து வரப்படுகிறது.

6.6. கருப்பண நாடாரின் வாரிசுகள் அனைவரையும் வாதி இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும், வாதிக்கும், அவரது தந்தையான லேட்.கருப்பண நாடாரின் வாரிசுகளுக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட பகுதி என்றே விளம்புகை செய்ய கோரியுள்ளார். வழக்கு சொத்தை பொறுத்து வாதியும் அவரது சகோதரர், சகோதரிகள் எவ்வித பிரிவும் செய்யாமல் அவர்களுக்குள் பொதுவில் பாத்தியப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் வாதிக்கும், கருப்பண நாடாரின் வாரிசுகளுக்கு பொதுவாக பாத்தியப்பட்ட சர்வே எண்.379/2–ல் கீழமேல் 124.6



APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.31 17:31:13 +0530

மீட்டரும், தென்வடல் கிழக்கு பகுதியில் 11 மீட்டரும் சர்வேயர் வரைபடத்தில் நீல நிறமிட்ட பகுதியானது பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை வாதி நிரூபித்துள்ளார் என்றும், எனவே இவ்வழக்கில் வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**7. முடிவாக,** இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. வழக்கு சொத்துக்கள் வாதிக்கும், லேட்.கருப்பண நாடாரின் மற்ற வாரிசுகளுக்கும் பொதுவில் பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், அதன் தொடர் பரிகாரமாக வாதி வழக்கு சொத்தில் அமைதியான முறையில் விவசாயம் செய்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களது வகையறா ஆட்களோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வழங்கியும், வழக்கு செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.31 17:31:19 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி**.

**வாதி தரப்பு சாட்சி –**

நடராஜன் – வா.சா.1

கமலா – வா.சா.2

**வாதி தரப்பு சான்றாவணங்கள் –**

| வரிசை | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 09.09.2024 | மாதிரி வரைபடம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 30.01.2001 | கருப்பணநாடார் பெயரில் வழங்கிய நில சுவாதீன ஒப்படைப்பு ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 23.12.2003 | நானும், கருப்பணநாடாரும், முருகையநாடார் வகையறா மீது தாக்கல் செய்து வழக்கின் நீதிமன்ற தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 13.08.2024 | லேட்.கருப்பணநாடார் பெயரில் வழங்கப்பட்ட பட்டா | கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | 26.12.2023 | நான் தாவா நிலத்தை அளக்க அரசுக்கு செலுத்திய கட்டண இ–செலான் ரசீது | கணினி நகல் |
| வா.சா.ஆ.6 | 25.06.2024 | ஜமாபந்தி மூலம் தாவா சொத்தை அளக்க மனு கொடுத்ததற்கான ஒப்புகைச் சீட்டு | கணினி நகல் |
| வா.சா.ஆ.7 | 18.09.2024 | தாவா சொத்திற்குரிய அரசாங்க மதிப்பீடு | கணினி நகல் |
| வா.சா.ஆ.8 | 21.12.2023 | எனது மனைவி பிரதிவாதிகள் மீது கொடுத்த புகார் மனு ஏற்பு ரசீது. | நகல் |
| வா.சா.ஆ.9 | 25.03.2023 | எனது தாயார் ஆட்சியம்மாள் இறப்புச் சான்றிதழ். | அசல் |
| வா.சா.ஆ.10 | 05.04.2023 | எனது தாயார் ஆட்சியம்மாள் வாரிசு சான்றிதழ். | அசல் |
| நீ.ம.சா.ஆ.1 | 26.09.2025 | நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | 26.09.2025 | நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் | அசல் |



APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.31 17:31:26 +0530

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –** இல்லை.

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.31 17:31:33 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**